**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள்**
**முன்னிலை: திரு.எஸ்.நாகராஜன், இ.ஆ.ப.,**

**ஜே4/34861/2012** **நாள்:22.03.2013**

பொருள்: ஆதிதிராவிடர் நலம் - கன்னியாகுமரி மாவட்டம் - ஆதிதிராவிடர் நலக்குழு – திருத்தியமைத்தல் - மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு உறுப்பினர்கள் திருத்தியமைத்தல் - ஆணைகள் வெளியிடல் - சார்பு.

பார்வை: 1. அரசாணை (நிலை) எண் 105 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை நாள் 12.09.1996.
2. இவ்வலுவலக செயல்முறைகள் எண்.ஜே.4/34861/2012, நாள் 08.02.2013.
3. திரு. எம். கணேஷ் என்பவரின மனு நாள் 18.02.2013.

***

**ஆணை:**

மேலே 1-ல் படிக்கப்பட்ட அரசாணையின்படி மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு கன்னியாகுமரி மாவட்டத்தில் பார்வை 2-ல் கண்ட செயல்முறைகளின்படி அமைக்கப்பட்டிருந்தது.

இந்த குழுவில் ஆதிதிராவிடர் வழக்கறிஞராக சேர்க்கப்பட்ட வழக்கறிஞர் திரு. எம். கணேஷ். பி.ஏ.பி.எல். என்பவர் தான் தமிழ்நாடு பார் கவுன்சில் உறுப்பினராக பதிவு செய்யவில்லை எனவும், தன்னை ஆதிதிராவிடர் நலக்குழு வழக்கறிஞர் பதவியிலிருந்து மாற்றி வன்கொடுமை தடுப்பு மற்றும் கண்காணிப்பு குழுவில் உறுப்பினராக நியமனம் செய்ய பார்வை 3-ல் படிக்கப்பட்ட மனுவில் கோரியிருந்தார்.

தனியரது கோரிக்கையினை ஏற்று தனியரை கன்னியாகுமரி மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழுவிலிருந்து விடுவித்து, இந்த குழுவினை கீழ்கண்டவாறு திருத்தி அமைத்து ஆணையிடப்படுகிறது.

இக்குழு 2013-முதல் 2015 வரை மூன்று ஆண்டுகள் வரை இப்பதவியை வகிப்பர்.

| | | | |
|---|---|---|---|
| 1. | மாவட்ட ஆட்சித் தலைவர் | : | தலைவர் |
| 2. | மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் | : | செயல் அலுவலர் |
| 3. | வருவாய் கோட்டாட்சியர் நாகர்கோவில் | : | உறுப்பினர் |
| 4. | வருவாய் கோட்டாட்சியர் பத்மனாபபுரம் | : | உறுப்பினர் |
| 5. | திட்ட அலுவலர்,<br>மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை,<br>நாகர்கோவில். | : | உறுப்பினர் |
| 6. | மாவட்ட மேலாளர், தாட்கோ, நாகர்கோவில் | : | உறுப்பினர் |
| 7. | “A” நிலை ஆதிதிராவிடர் அதிகாரி | : | திரு. C. சிங்,<br>16/1B மாத்தாண்டவர்மா நகர்,<br>களியங்காடு,<br>வெட்டூர்ணிமடம் அஞ்சல்,<br>கன்னியாகுமரி மாவட்டம். |

| | | | |
|---|---|---|---|
| 8. | "B" நிலை ஆதிதிராவிடர் அதிகாரி | : | திரு.J.பாபுதாஸ், M.Com<br>த/பெ எம்.ஜெபமணி,<br>13/114, வில்பாறையடி,<br>வில்லுக்குறி அஞ்சல். |
| 9. | "C" நிலை ஆதிதிராவிடர் அதிகாரி | : | திரு. C. அண்ணாதுரை,<br>33/2C/1 மேல்மாடி,<br>வாட்டர் டேங் சாலை,<br>நாகர்கோவில். |
| 10. | "D" நிலை ஆதிதிராவிடர் அதிகாரி | : | திரு.K. கிருஷ்ணன்குட்டி,<br>உதயகிரிகோட்டை,<br>பூதப்பாண்டி ரேஞ்ச் |
| 11. | ஆதிதிராவிடர் அரசு அலுவலர்களின் மாவட்ட சங்க தலைவர் | : | திரு. S. டைட்டஸ்சாம்<br>SDE/BSNL/Nagercoil |
| 12. | ஆதிதிராவிடர் அமைப்பின் மாவட்ட தலைவர் | : | திரு. C. ராமசந்திரன்,<br>"சிந்து" 11/200 SRO சாலை,<br>கொட்டாரம் அஞ்சல்,<br>கன்னியாகுமரி மாவட்டம் |
| 13. | பழங்குடியினர் நல சங்க தலைவர் | : | திரு. C. சுகுமாரன் காணி,<br>த/பெ. சந்திரன் காணி,<br>கல்லர வயல்,<br>பத்துகாணி. |
| 14. | ஆதிதிராவிடர் வழக்கறிஞர் | : | திரு.C.S. சுரேஷ்பாபு. B.Sc. B.L.,<br>த-பெ. சிதம்பர சாமி,<br>கதவு எண் 12/64,<br>ஆத்தியடி, மருங்கூர் அஞ்சல்,<br>குமரி மாவட்டம். |
| 15. | ஆதிதிராவிடர் பேராசிரியர் | : | Dr. திரு.கே. கணேசன், எம்.காம்.,<br>"Jennyezhil"<br>13/31 ஆறுமுகபுரம்,<br>கொட்டாரம்,<br>கன்னியாகுமரி மாவட்டம். |
| 16. | ஆதிதிராவிடர் தொழிலதிபர் | : | K. மணிகண்டன்,<br>த/பெ. M. காசி<br>ஆற்றங்கரை காலனி<br>சீதப்பால். |
| 18. | ஆதிதிராவிடர் ஊராட்சி ஒன்றிய தலைவர் | : | திருமதி. வி.சாந்தி<br>தலைவர்,<br>அகஸ்தீஸ்வரம் ஊராட்சி<br>ஒன்றியம், மகாதானபுரம் |

**இம்மாவட்ட குழு கீழ்வரும் பணிகளை மேற்கொள்ளும்:**

1. ஆதிதிராவிடர் நலப்பள்ளிகளின் கல்வித்தரம், பயிற்றுநிலை வசதிகள் மேம்பாட்டிற்கான அறிவுரைகள் நல்கல்.
2. விடுதிகளில் விளையாட்டு வசதிகள், நூலக மேம்பாடு தேர்வு ஆயத்தப் பயிற்சிகள் அளிக்க உறுதுணை நல்கல்.
3. பொங்கல் திருநாள், டாக்டர் அம்பேத்கார் பிற்நத நாள் மற்றும் நினைவு நாள், மனிதநேய வாரவிழா ஆகிய விழாக்களில் ஆதிதிராவிடர் நலப்பள்ளிகளில் மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகள், கலைப் போட்டிகள், பேச்சுப் போட்டிகள், கட்டுரைப் போட்டிகள் நடத்துதல் விழாக்களை சிறப்புற நடத்திட உதவுதல்.
4. அரசு பணியிடங்களில் ஒதுக்கீடு நடைமுறையை ஆய்விடல்.
5. கல்வி நிலையங்களில் ஒதுக்கீடு நடைமுறையை ஆய்விடல்.
6. சிறப்பு உள்ளடக்கத் திட்டங்களை செயல்படுத்திட வகை செய்தல்.
7. தாட்கோ திட்டங்களைச் செயல்படுத்திட வகை செய்தல்.
8. ஆதிதிராவிடர்களுக்கு வீட்டு மனை, பயிர்நிலம் வழங்குதலையும், வழங்கியதையும் ஆய்விடல், பேணுதலையும் ஆய்வு செய்து குழுவில் கொணருதல்.
9. நில உச்சவரம்பு நிலங்கள், பஞ்சமி நிலங்கள் மற்றும் பூதான நிலங்கள் இவற்றை ஆதிதிராவிடர்களுக்கு அளித்தலையும், அளிக்கப்பட்ட நிலங்களைப் பேணலையும் ஆய்விடல்.
10. ஆதிதிராவிடர் மேம்பாடு குறித்து பொதுவான ஆலோசனைகள் வழங்கல்.

மாவட்ட ஆட்சித்தலைவர்,
கன்னியாகுமரி மாவட்டம்

பெறுநர்:

சம்பந்தப்பட்டவர்கள்.
நகல்: ஆணையர், ஆதிதிராவிடர் நலத் துறை, சென்னை – 5.

நகல்: முக்கிய ஆணைத் தொகுப்பு.

## கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள்
## முன்னிலை: திரு.எஸ்.நாகராஜன், இ.ஆ.ப.,

**ஜே4/18180/2012** **நாள்:19.03.2013**

பொருள்: ஆதிதிராவிடர் நலம் - கன்னியாகுமரி மாவட்டம் - தீண்டாமை கடைப்பிடிக்காத மற்றும் மத நல்லிணக்கத்துடன் மக்கள் வாழும் கிராமம் - பரிசு தொகை ரூ.1000000/- வழங்கல் - தொடர்பாக.

பார்வை: அரசாணை (நிலை) எண் 69 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை நாள் 11.07.2012

*****

**ஆணை:**

கன்னியாகுமரி மாவட்டத்தில் தீண்டாமை கடைப்பிடிக்காத மற்றும் மத நல்லிணக்கத்துடன் மக்கள் வாழும் கிராமத்தினை தேர்வு செய்து பரிசுத்தொகையினை வழங்கிட கீழ்காணும் அலுவலர்களை கொண்டு குழு அமைத்து ஆணையிடப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | மாவட்ட ஆட்சித் தலைவர் | : | தலைவர் |
| 2. | மாவட்ட வருவாய் அலுவலர் | : | உறுப்பினர் |
| 3. | திட்ட அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நாகர்கோவில். | : | உறுப்பினர் |
| 4. | உதவி இயக்குநர் பேரூராட்சிகள், நாகர்கோவில் | : | உறுப்பினர் |
| 4. | மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் | : | உறுப்பினர் |
| 5. | மாவட்ட பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர். | : | உறுப்பினர் |

**இக்குழு கீழ்கண்ட நிபந்தனைகளை பூர்த்தி செய்துள்ள கிராமத்தினை தேர்வு செய்து பரிசுத்தொகை வழங்க பரிந்துரைக்கும்.**

1. உள்ளூர் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பொதுக்கோவில், குடிநீர் கிணறு, கடைகள், ஓட்டல்கள், குளம், ஏரி, சலூன் ஆகியவற்றை அனைவரும் சுதந்திரமாக அனுபவிக்கும் கிராமமாக இருக்கவேண்டும்.

2. தீண்டாமை ஒழிக்கப்பட்டது என்ற தத்துவத்தை கடை பிடிக்கும் மக்கள் உள்ள கிராமமாக இருக்கவேண்டும்.

3. தனியாருக்கு சொந்தமான கிணறுகளில் பிறா் தண்ணீா் எடுப்பதற்கு எந்த விதமான தடையும் இல்லாத கிராமமாக இருக்கவேண்டும்.

4. இதர சமுகத்தினா்கள் ஆதிதிராவிடா் மற்றும் பழங்குடியின மக்களுக்கு வீடுகளை வாடகைக்கு விடபட்டிருக்கவேண்டும்.

5. அனைத்து சமுகத்தினரும் விழாக்களில் ஒன்றாக சமமாக அமா்ந்து விருந்து சாப்பிடுதல் வேண்டும்.

6. இதர சமுகத்தினா் தங்களது விழாக்களுக்கு ஆதிதிராவிடா்களை கலந்துக்கொள்ள அழைத்தல் வேண்டும்.

7. தீண்டாமை ஒழிப்பை கண்ணியமாக கடைபிடிக்கும் அதே கிராமத்திற்கு மீண்டும் பரிசு அளிக்கலாம்.

8. அனைத்து சமுகத்தினரும் பல ஆண்டுகளாக சுமுகமாக நல்லுறவுடன் வாழும் கிராமமாக இருத்தல் வேண்டும்.

<u>பரிசுத்தொகை செலவிட மேற்கொள்ளளும் பணிகள்</u> :

1. குடிநீா் வசதிசெய்தல் மற்றும் மேம்படுத்துதல்.

2. பாதை வசதி மேம்பாடு

3. பள்ளிக்கூட கட்டிடம் சீா்செய்தல்

4. பள்ளி மற்றும் குழந்தைகள் நல மைய கட்டிடம் கட்டுதல்.

5. கால் நடைகளுக்கு தண்ணீா் தொட்டி கட்டுதல்.

6. புதிய தெரு விளக்குகள் அமைத்தல்

7. ஊராட்சியில் அனைத்து மக்களுக்கும் பயன்படும் வகையில் எந்த பணியை செய்வது, என்பதை ஊராட்சியே முடிவு செய்யலாம்.

மாவட்ட ஆட்சித்தலைவா்,
கன்னியாகுமரி மாவட்டம்

பெறுநா்:

சம்பந்தப்பட்டவா்கள்.

நகல்: ஆணையர், ஆதிதிராவிடர் நலத் துறை, சென்னை – 5.

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள்**
**முன்னிலை: திரு.எஸ்.நாகராஜன், இ.ஆ.ப.,**

**ஜே4/18180/2012** **நாள்:19.03.2013**

பொருள்: ஆதிதிராவிடர் நலம் - கன்னியாகுமரி மாவட்டம் - தீண்டாமை கடைப்பிடிக்காத மற்றும் மத நல்லிணக்கத்துடன் மக்கள் வாழும் கிராமம் - பரிசு தொகை ரூ.1000000/- வழங்கல் - தொடர்பாக.

பார்வை: அரசாணை (நிலை) எண் 69 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை நாள் 11.07.2012

*****

**ஆணை:**

கன்னியாகுமரி மாவட்டத்தில் தீண்டாமை கடைப்பிடிக்காத மற்றும் மத நல்லிணக்கத்துடன் மக்கள் வாழும் கிராமத்தினை தேர்வு செய்து பரிசுத்தொகையினை வழங்கிட கீழ்காணும் அலுவலர்களை கொண்டு குழு அமைத்து ஆணையிடப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | மாவட்ட ஆட்சித் தலைவர் | : | தலைவர் |
| 2. | மாவட்ட வருவாய் அலுவலர் | : | உறுப்பினர் |
| 3. | திட்ட அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நாகர்கோவில். | : | உறுப்பினர் |
| 4. | உதவி இயக்குநர் பேரூராட்சிகள், நாகர்கோவில் | : | உறுப்பினர் |
| 4. | மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் | : | உறுப்பினர் |
| 5. | மாவட்ட பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர். | : | உறுப்பினர் |

**இக்குழு கீழ்கண்ட நிபந்தனைகளை பூர்த்தி செய்துள்ள கிராமத்தினை தேர்வு செய்து பரிசுத்தொகை வழங்க பரிந்துரைக்கும்.**

1. உள்ளூர் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பொதுக்கோவில், குடிநீர் கிணறு, கடைகள், ஓட்டல்கள், குளம், ஏரி, சலூன் ஆகியவற்றை அனைவரும் சுதந்திரமாக அனுபவிக்கும் கிராமமாக இருக்கவேண்டும்.

2. தீண்டாமை ஒழிக்கப்பட்டது என்ற தத்துவத்தை கடை பிடிக்கும் மக்கள் உள்ள கிமமாக இருக்கவேண்டும்.

3. தனியாருக்கு சொந்தமான கிணறுகளில் பிறர் தண்ணீர் எடுப்பதற்கு எந்த விதமான தடையும் இல்லாத கிராமமாக இருக்கவேண்டும்.

4. இதர சமுகத்தினர்கள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு வீடுகளை வாடகைக்கு விடபட்டிருக்கவேண்டும்.

5. அனைத்து சமுகத்தினரும் விழாக்களில் ஒன்றாக சமமாக அமர்ந்து விருந்து சாப்பிடுதல் வேண்டும்.

6. இதர சமுகத்தினர் தங்களது விழாக்களுக்கு ஆதிதிராவிடர்களை கலந்துக்கொள்ள அழைத்தல் வேண்டும்.

7. தீண்டாமை ஒழிப்பை கண்ணியமாக கடைபிடிக்கும் அதே கிராமத்திற்கு மீண்டும் பரிசு அளிக்கலாம்.

8. அனைத்து சமுகத்தினரும் பல ஆண்டுகளாக சுமுகமாக நல்லுறவுடன் வாழும் கிராமமாக இருத்தல் வேண்டும்.

**<u>பரிசுத்தொகை செலவிட மேற்கொள்ளளும் பணிகள்</u>** :

1. குடிநீர் வசதிசெய்தல் மற்றும் மேம்படுத்துதல்.

2. பாதை வசதி மேம்பாடு

3. பள்ளிக்கூட கட்டிடம் சீர்செய்தல்

4. பள்ளி மற்றும் குழந்தைகள் நல மைய கட்டிடம் கட்டுதல்.

5. கால் நடைகளுக்கு தண்ணீர் தொட்டி கட்டுதல்.

6. புதிய தெரு விளக்குகள் அமைத்தல்

7. ஊராட்சியில் அனைத்து மக்களுக்கும் பயன்படும் வகையில் எந்த பணியை செய்வது, என்பதை ஊராட்சியே முடிவு செய்யலாம்.

ஒம்/- மாவட்ட ஆட்சித்தலைவருக்காக

-உ.ந.உ.ப-

மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர்
நல அலுவலர், (பொறுப்பு) உதவி ஆணையர் ஆயம்
நாகர்கோவில்.

பெறுநர்:

சம்பந்தப்பட்டவர்கள்.

நகல்: ஆணையர், ஆதிதிராவிடர் நலத் துறை, சென்னை – 5.